ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිසේෂமானது

අංක 2170/6 - 2020 අප්‍රේල් මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.04.09

*2170/6 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்**

*அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 02/ 2020*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் மூலம் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளையானது, பொது மக்கள் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

**எஸ். ஆர். ஆட்டிகல,**
செயலாளர்,
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, ஏப்பிறல் 09.*

1A - PG 4962 — 567 (2020/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்*

*கட்டளை*

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வருமாறு இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும், அவ்வட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதத்தில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) அட்டவணை 'அ' இன் ஏற்பாடுகளின் கீழ் முன்னுரிமை வீதமொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படக்கூடியதாக இருக்குமிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதத்தில் இறக்குமதித் தீர்வையைக் கோரி அறவிடுமாறு சுங்கப் பணிப்பாளர் தலைமை அதிபதியை, இக்கட்டளை மூலம் வேண்டுகின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2020, ஏப்பிறல் 09.

**அட்டவணை**

| இ. ப. த. இல. (1) | இ. மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | தீர்வை வீதம் பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| 27.10 | | | பெற்றோலியம் எண்ணெய்களும், நிலக்கரித் தார் கலவை (பிற்றுமினஸ்) கனிப்பொருட்களிலிருந்து பெறப் பட்ட எண்ணெய்களும், சுத்திகரிக்கப் படாதவை தவிர்ந்தவை : வேறெங்கும் குறிப்பிடப்படாத அல்லது சேர்க்கப்படாத நிறையில் 70% அல்லது கூடுதலாக பெற்றோலிய எண்ணெய் அல்லது நிலக்கரித் தார் கலவை (பிற்றுமினஸ்) கனிப்பொருட்களிலி ருந்து பெறப்பட்ட எண்ணெயைக் கொண்ட தயாரிப்புகள், இவ்வெண்ணெய்கள் இத்தயாரிப்பு களின் அடிப்படை உள்ளீடுகளாக இருக்க வேண் டும் | | | |
| | 2710.19.70 | --- | மசகு எண்ணெய் (பேஸ் ஒயில்கள்) மசகுகள் தயாரிப்பதற்கான | | 30% அல்லது ஒரு கி. கி. ரூபா 45.00 | கி. கி. |
| | 2710.19.80 | --- | மசகுகள் | | 30% அல்லது கி. கி. ரூபா 115.00 | கி. கி. |
| | | | | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இ. ப. த. இல. (1) | இ. மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | தீர்வை வீதம் பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| 34.03 | | | பெற்றோலியத்தார் (பிற்றுமினஸ்) கனிப் பொருட்களிலிருந்து பெறப்பட்ட எண்ணிக்கைகளின் அல்லது அடிப்படை உள்ளீடாக பெற்றோலிய எண்ணெய்களை நிறையின் 70% அல்லது கூடுதலாகக் கொண்ட தயாரிப்புகள் தவிர்த்து புடவைகளை, தோலை, மென் மயிர்த் தோல் அல்லது பிற பொருட்களை எண்ணெய் அல்லது கொழுப்புப் பரிகரிப்புச் செய்யப் பயன்படும் ஒரு வகைத் தயாரிப்புகளும் உராய்வு நீக்கித் தயாரிப்புகளும் (உராய்வு நீக்கியை அடிப்படையாகக் கொண்ட வெட்டும் எண்ணெய்கள் உட்பட, அரை புரியாணி விடுவிப்புத் அல்லது தயாரிப்புகள், துரு எதிர்ப்பு அல்லது அரிப்பு எதிர் | | | |
| | | - | பெற்றோலியம் எண்ணெய்கள் அல்லது பெற்றோலியத்தாரில் (பிற்றுமினஸ்) இருந்து பெறப்பட்டதான எண்ணெய் கொண்டவை : | | | |
| | | | | | | |
| | 3403.19 | -- | பிற | | | |
| | 3403.19.10 | --- | மோட்டார் வாகனங்களுக்கு பாவிக்கப் படும் உராய்வு நீக்கிகள் | (IN) இலவசம்<br>(PK) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | 30% அல்லது ஒரு கி. கி. ரூபா 50.00 | கி. கி. |
| | | | | | | |
| | 3403.99 | -- | பிற : | | | |
| | 3403.99.10 | --- | மோட்டார் வாகனங்களுக்கு பாவிக்கப் படும் உராய்வு நீக்கிகள் | (IN) இலவசம்<br>(PK) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | 30% அல்லது ஒரு கி. கி. ரூபா 50.00 | கி. கி. |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.